திரு. ஜி. பழனிச்சாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

''சமூக நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 345,70,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பிற்பகல் 1.30.

5. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் பேரவையின் ஒப்புதலோடு செய்யப்பட்டுள்ளன என்பதை அறிவிக்கின்றேன் :

24—9—1991 **செவ்வாய்க்கிழமை**	காலை மானியக் கோரிக்கை எண். 20 வேளாண்மை மானியக் கோரிக்கை எண்.53 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.
	மாலை கோரிக்கை எண்.13 மற்றும் 14 நீதி நிர்வாகம் சிறைச்சாலைகள்.

25—9—1991 புதன்கிழமை

காலை
கோரிக்கை எண். 4 பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம்.

மாலை
கோரிக்கை எண். 10 பால் வழங்கு திட்டங்கள், 21. மீனளம்
22 கால்நடை வளர்ப்பு
25 சின்கோனா,
45 காட்டு வளத்துறை
மற்றும் 59 காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு.

அதாவது ஏற்கெனவே 24—9—1991 மாலையில் உங்களுக்கு குறித்து அனுப்பப்பட்ட கோரிக்கை எண்கள் 25—9—1991 புதன்கிழமையும், அதேபோல புதன்கிழமை மாலை அறிவிக்கப் பட்டிருந்தது 24—9—1991 மாலையும் எடுத்துக் கொள்ளப்படு கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகல் 4.00

பேரவை மீண்டும் பிற்பகல் 4.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

மானியக் கோரிக்கைகள், 1991—92, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண். 11— மாவட்ட நிர்வாகம்.
கோரிக்கை எண். 1— நிலவரித் துறை.
கோரிக்கை எண். 5— முத்திரைத் தாள்கள் நிர்வாகம்.
கோரிக்கை எண். 6— பத்திரப் பதிவு.
கோரிக்கை எண். 41— இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
கோரிக்கை எண். 44— எழுதுபொருள் அச்சுத்துறை.
கோரிக்கை எண். 46— இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்— தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண். 11— மாவட்ட நிர்வாகம். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.